உங்கள் மங்கள வைபவங்களை வீடியோ படம் பிடித்துக்கொள்ளவும்
அழகிய முறையில் கலர்ப் படம் பிடித்துக் கொள்ளவும் நாடுங்கள்
Technico Cool Engineerings
K. K. S. Road, Kokuvil

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 134 திங்கள் 18-06-1990 (ஆனி 04) துல்ஹஜ்ஜா 24

தொலைக்காட்சிப் பெட்டி வீடியோ டெக், குளிரூட்டிகள் மற்றும் சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளையும் பழுதுபார்க்க
சிறந்த ஸ்தாபனம்
Technico Cool Engineerings

### வடக்குக் கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில்

# ஸ்ரீலங்கா படையினர் யுத்த நிறுத்த மீறல்

# புலிகள் கடும் கண்டனம்!

நேற்று முன்தினம் மாலை ஆறு மணி முதல் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளபோதிலும் நேற்று ஸ்ரீலங்கா அரசபடைகள் பரவலாக யுத்த நிறுத்த மீறல்களில் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய அரசபடைகளின் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் குறித்து விடுதலைப் புலிகள் நீதிய மைச்சர் ஜனாப் ஏ சி.எஸ் ஹமீத்திடமும் பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்கவிடமும் தமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்காப் படைகள் நேற்று யுத்த நிறுத்த மீறலை மேற்கொண்டிருந்த போதிலும் விடுதலைப்புலிகள் தமது தற்பாதுகாப்புக் கருதியேனும் எதுவித யுத்தநிறுத்த மீறலிலும் ஈடுபடவில்லை.

நேற்று வடக்கு கிழக்குப் பகுதிகளில் பரவலாக குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகவும் பொதுமக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## ஸ்ரீ லங்காப் படையினரின் யுத்தநிறுத்த மீறல்கள்

கடந்த இருபத்தி நான்கு மணிநேரத்தில் வடக்கு கிழக்குப்பகுதியில் பரவலாக அரச படைகள் யுத்த நிறுத்தத்தை மீறிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு பெரியபோரதீவில் நேற்று நூற்றிஐம்பது வீடுகள் இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. சாந்தமலைப்பகுதியில் தொடர்ந்து தமிழ் மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு வருகிறது. இதே வேளை களுவாஞ்சிக்குடி, கல்லடி கும்புறுமூலை, புனானை ஆகிய பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தி வரு

— 08ஆம் பக்கம் பார்க்க

## இவ்வாரத்தினுள் மருந்துகள் வராவிடின் வடபகுதியில் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்படும்

வடபகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் போதுமான அளவு மருந்துகள் தற்போது கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கொழும்பில் இருந்து இவ்வாரத்தினுள் மருந்துகள் வந்துசேராவிட்டால் முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

— 08ஆம் பக்கம் பார்க்க

### ஷெல் வீச்சுகளால் வெளியேறியோர்

## யுத்தநிறுத்தம் ஏற்பட்டும் சொந்த இடம் திரும்பவில்லை

கடந்த சிலநாட்களாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட விடுதலைப் புலிகள் ஸ்ரீ லங்கா படையினர் மோதலினால் இடம் பெயர்ந்த பொது மக்களில் சிறிதளவினர் மட்டுமே தமது இருப்பிடங்களை நோக்கி விரைகின்றனர்.

ஷெல் வீச்சுகளினாலும் பொம்பர் தாக்குதலினாலும்

—8 ஆம் பக்கம் பார்க்க

## சிறில் ரணதுங்க கட்டுப்பாட்டை விமானப்படை மீறுகின்றது

விமானப்படை தனது கட்டுப்பாட்டினை மீறி செயல்படுவதாக கூறியுள்ளார் பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்க. வட, கிழக்குப் பகுதியில் விமானப் படை விமானங்கள் நேற்றுத் தொடர்ந்து தாக்குதல் நடாத்தியது குறித்து விடுதலைப் புலிகள் பாதுகாப்புச் செயலாளருடன் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

## உணவு பொருள்பெற ப.நோ.கூ. சங்கத்திற்கு அழைப்பு

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சகல பல. நோ. கூ சங்கங்களின்கொள்வனவு உத்தியோகத்தர்கள் வாகன வசதியுடன் தெல்லிப்

— 08ஆம் பக்கம் பார்க்க

## படையினர் சோதனை பயணிகளுக்கில்லை

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து நேற்று போக்குவரத்துப் பாதைகள்யாவற்றிலும் வாகனங்கள், மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டது.

—8 ஆம் பக்கம் பார்க்க

## மரண ஊர்வலத்தைக் கலைக்க ஹெலி துப்பாக்கிப் பிரயோகம்

பூநகரியில் நேற்று இடம்பெற்ற விடுதலைப் போராளி ஒருவரின் மரணஊர்வலத்தை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவ ஹெலி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினால் மக்கள் சிதறி ஓடினார்கள். (03)

### ஸ்ரீ லங்கா கடற்படையினர் நேற்றும்

## வடமராட்சி மீனவர்களின் படகுகளை கைப்பற்றினர்

நேற்றும் ஸ்ரீலங்கா கடற்படையினர் மூன்று வடமராட்சி மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை சுமார் 8.30 மணியளவில் பாக்கு நீரிணைக் கடலில் ரோந்து சேவையில் ஐந்து கடற்படைக் கப்பல்கள் ஈடுபட்டிருந்தன. இவர்கள் மூன்று மீன்பிடிப்படகுகளை கைப்பற்றிச்சென்றுள்ளனர். (39)

### மட்.கும்புறுமூலை முகாமிற்கு

## ஆகாயமார்க்கமாக ஆயுதங்கள்; விடுதலைப்புலிகளிடம்!

கும்புறுமூலை முகாமிற்கு ஆகாய மாாக்கமாக போடப்பட்ட ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

யுத்த நிறுத்தம் நேற்றுமுன் தினம் அமுலுக்கு வந்த பின்னர் மட்டக்களப்பு கும்புறுமூலை இராணுவ முகாமிற்கு ஆகாய மார்க்கமாக ஆயுதங்கள் அடங்கிய பொதிகள்

— 08ஆம் பக்கம் ப்ார்க்க

## தொலைத்தொடர்பு துண்டிப்பு அரசுடன் தொடர்பு இல்லை

வடக்கு,கிழக்குப் பகுதிக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் தொலைத் தொடர்புகள் திட்டமிடப்பட்டு துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதனால் நேற்று வடகிழக்குப் பகுதியில் அரசபடைகள் தரப்பில் இடம்பெற்ற யுத்த நிறுத்த மீறல்களை அரசாங்க உயர் மட்டத்திற்கு அறிவிப்

—8ம் பக்கம் பார்க்க

## திருகோணமலை தாக்குதல்களால் தமிழ்மக்கள் வெளியேற்றம்

திருகோணமலையில் இடம்பெற்ற ஷெல், பொம்மர் தாக்குதல்களினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இடம் பயர்ந்த மக்கள் நிலாவெளி, சாம்பல்தீவு, குச்சவெளி ஆகிய இடங்களில்

—8ம் பக்கம் பார்க்க

### டீசல் தட்டுப்பாடு உள்ளபோதும்

## வவுனியா, கிளிநொச்சி பஸ் சேவைகள் ஆரம்பம்

நேற்றைய தினம் யாழ்ப்பாண டிப்போ மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவையை மேற்கொண்டது. டீசல் தட்டுப்பாடே இதற்குக் காரணம்

— 8ம் பக்கம் பார்க்க

### குடும்பநலத் திட்டத்தினால்

# உறுதிமிகக சமுதாயத்தை உருவாக்க முடியும்

''சிங்கள பேரினவாதத்தினால் எமது தமிழ் மக்களுக்கு தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல்வேறு இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றிலிருந்து மீட்சியடைவதற்கு பிறக்கும் குழந்தைகளை உடல், உள வளர்ச்சி பெற்றவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் வள்ர்ப்பதற்கு குடும்ப நலத் திட்டம் வழி வகுக்கின்றது.''

இவ்வாறு இலங்கை குடும்ப நலத் திட்டச் சங்கத்தின் ஆதரவில் பிரான்பற்று குடும்ப நலத் திட்ட செயற் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மேற்படி சங்கத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் திரு. என்.ரி. அன்பானந்தன் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. அ. ஈஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. அன்பானந்தன் தொடர்ந்து உரையாற்றுகையில் பிறக்கும் குழந்தைகளை நல்ல முறையில் உருவாக்கவும், உறுதிமிக்க சமுதாயத்தை உருவாக்கவும் தாய் - சேய் நலன் பேணப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்,

பிரான்பற்று கிராம சேவை அலுவலர் திரு.கே.நாகராசா, ஆசிரியர் எஸ். தனராசசிங்கம் பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் திரு.பொ.பேரின்பநாதன், செல்வி ஜெயவதனி சிறிஸ்கத்தராசா ஆகியோர் இவ் விழாவில் உரையாற்றினார்கள். குடும்பநல பயிற்சி பெற்ற தொண்டர்களுக்கான சான்றிதழ்களை திரு. அன்பானந்தன் வழங்கினார். விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி அன்பானந்தன் வழங்கினார். (13கி)

# நல்லூர்க் கந்தன் உற்சவம் ஜூலை 27-ல் ஆரம்பமாகும்

நல்லூர்க் கந்தசுவாமிஆலய வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி மஞ்சத் திருவ்ழாவும், 14-ம் திகதி கார்த்திகை உற்சவமும், 15-ம் திகதி காலை சந்தான கோபால உற்சவமும், மாலை கைலாச வாகன உற்சவமும் இடம் பெறும்,

16-ம்திகதி காலைகஜவல்லி மஹாவல்லியும், மாலை வேல் விமான உற்சவமும் இடம் பெறும். 17-ம் திகதி தெண்டாயுத பாணி உற்சவமும், 18-ம் திகதி சப்பறமும் இடம் பெறும்.

19-ம் திகதி ரதோற்சவமும், 20-ம் திகதி தீர்த்த உற்சவமும், 21-ம் திகதி பூங்காவனமும், 22-ம் திகதி பைரவர் உற்சவமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# தொகைமதிப்பு கணக்கெடுப்பு பாடசாலைகளில் ஆரம்பம்

(நாவற்குழி)

யூன் மாதம் 1ந் திகதியில் உள்ளபடி நாட்டில் உள்ள சகல பாடசாலைகளினதும் தொகைமதிப்புக் கணக்கெடுக்கப்படுகிறது.

இந்த விபரங்கள் கோரும் பட்டோலை உயர் கல்வி அமைச்சு செயலாளர் திரு எம், டீ. டீ. பீரிஸினால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டோலையில் பாடசாலையில் உள்ள மாணவர்கள் விபரம், ஆசிரியர்கள் விபரம், ஆசிரியர்கள் 1-1-89லிருந்து 31-12-89வரைலீவுஎடுத்த வ்பரம் பாடசாலை நிதிவளம் பற்றிய விபரம் என்பன கோரப்பட்டுள்ளன.

அத்தோடு இம்மாதம் 25ந் திகதிக்கு முன் இவ் விபரங்களை கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறும் பணிக்கப்பட்டுளது, (ப5கி)

# மதத்தையும் மொழியையும் மறந்தவர் மனிதர் இல்லை

'எமது மதத்தையும், மொழியையும் நாம் என்றும் மறக்கக் கூடாது. இன்று எமது மக்களிடையே இறையுணர்வு குறைந்து வருகின்றது. இவ்வேளையில் சில சந்தர்ப்பவாதிகளால் மதமாற்றம் செய்யப்படுவது மன்னிக்க முடியாதது.'

இவ்வாறு சரசாலை இந்து இளைஞர் மன்றத்தின் சைவ சமயப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் மன்றத் தலைவர் திரு. கு. ஞானேஸ்வரன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் பொழுது, தமிழும், சைவமும் இரண்டறக் கலந்தது. முற்காலத்தில் தமிழும், சைவமும் ஆலயங்களிலேயே வளர்க்கப்பட்டன. எமது சமய குரவர்கள் ஆக்கித்தந்த தேவார திருவாசகங்களையும், படித்தும், அவர்களின் நற்போதனைகளைப் பின்பற்றியும் வாழ வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டம் தனக்கிளப்பு அம்மன் கோவிலில் திரு. த. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. சரசாலை இந்து இளைஞர் மன்றச் செயலாளர் திரு. க. சிவசங்கரநாதன், தனக்கிளப்பு இந்து இளைஞர்மன்றச் செயலாளர் திரு. செ. பேரின்பநாதன், திரு. ச. சரவணபவானந்தன் ஆகியோரும் பேசினர். (36 கி)


**Licensed Surveyors Association Northern Division**

Members are hereby informed that the Special General Meeting fixed for Wednesday the 20th insıant is postponed.

C. Sandrasegara
Hony. Secretary

06298


வடக்கு, கிழக்கு மற்றும் வெளி மாவட்டப் பகுதிகளில் ஸ்ரீலங்கா முப்படைகளின் தாக்குதல்களினால் பாதிப்பிற்குள்ளான

# பொதுமக்களின் கவனத்திற்கு

வடக்கு, கிழக்கு மற்றும் வெளிமாவட்டப் பகுதிகளில் கடந்த 11 - 06 - 90 இல் இருந்து 16-06-90 வரை நடைபெற்ற ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகளின் தாக்குதல்களினால் பாதிப்பிற்குள்ளான பொதுமக்களிடமிருந்து கீழ்காணும் விபரங்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உடனடியாக திரட்டவிருப்பதால் கீழ்காணும் விபரங்களை தந்துதவுமாறு பொதுமக்களை முன்னணி கேட்டுக்கொள்கிறது.

1. பாதிப்பு நிகழ்ந்த நாள் :-
2. பாதிப்பு நிகழ்ந்த இடம் :-
3. பாதிப்பு எத்தன்மையானது ;-
4. பாதிப்பு யாரால் ஏற்படுத்தப்பட்டது :-
(பொலிஸ்/இராணுவம்/கடற்படை/விமானப்படை/காடையர்கள்)

(அ) உயிரிழந்தவரின் பெயர், வயது, முகவரி, அவரது குடும்ப விபரம் போன்றவை தரப்பட வேண்டும்.

(ஆ) காயமுற்றோர்/ஊனமுற்றோர் பெயர், வயது, முகவரி, குடும்ப விபரம் போன்றவை தரப்பட வேண்டும்.

(இ) காணாமற்போனவர் விபரம், பெயர், வயது, முகவரி, குடும்பவிபரம்.

(ஈ) கைது செய்யப்பட்டோர் விபரம், பெயர், வயது, முகவரி, குடும்ப விபரம் (யாரால், எப்போது, எவ்விடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்ற விபரம் தரப்படவேண்டும்)

(உ) பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டவர்கள் விபரம், பெயர், வயது, பால், முகவரி, குடும்ப விபரம்.

(ஊ) படையினரின் நடவடிக்கைகளால் இழந்த/சேதமாக்கப்பட்ட சொத்துக்களின் விபரங்கள். (சொத்து இழப்பின் பெறுமதிகளை தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடவும்)

பாதிப்பிற்குள்ளானவர்கள் மேற்படி விபரங்களைத் தயாரித்து அந்தந்த மாவட்டங்களிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகங்களுக்கு தாமதிக்காமல் அனுப்பிவைக்கவும்.

மாவட்டச் செயலகங்களின் முகவரிகள்:-

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பிரதான வீதி,
கல்முனை.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி.
மாவட்டச் செயலகம்,
மணல்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
டிப்போ வீதி,
கனகபுரம்,
கிளிநொச்சி.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
தலைமைச் செயலகம்,
தர்மபுரம்,
கிளிநொச்சி.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
122, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
வைரவப் புளியங்குளம்,
வவுனியா.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பழைய பூங்கா வீதி,
மன்னார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பலாலி வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- மேற்படி விபரங்களைத் தயாரித்து தாமதிக்காமல் எமக்குக் கிடைக்கச் செய்வதற்கு சமூகசேவகர்கள், நலன்விரும்பிகள், சிற்றூர் அவை உறுப்பினர்கள், பொதுமக்கள் யாவரும் உதவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

# இலட்சங்களையல்ல இதயங்களைத் தேடுங்கள்

எமது பிரதேசங்களில் மோதல்கள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் அவ்வப்பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்புத்தேடி அயற்கிராமங்களுக்குச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது,

இலக்குகள், நிலைகளற்று வீசப்படும் குண்டுகளால் உடமை இழந்து, உற்றாரின் உயிர்களிழந்து, நொந்துவரும் மக்களை 'அகதிகள்' என்ற பெயர் சூட்டி வேடிக்கை பார்ப்பதே பாதிக்கப்படாத பகுதிகளில் வாழும் மக்களின் பண்பாகி விட்டது.

இவர்கள் "அகதிகளா?"...... இல்லை என்பதே எமது தீர்க்கமான கருத்து. அகதிகள் என்பது உடமை, நாடு அனைத்தையும் இழந்து ஆதரிக்க எவருமேயற்ற மக்களையே குறிக்கும்.

ஆனால், இன்று மோதல்கள் சுாரணமாக இடம்பெயர்வோர் அகதிகள் அல்லர். அவர்கள் தமது உடமைகளை இழந்திருக்கலாம், உறவினர்களின் உயிர்களை இழந்திருக்கலாம்.

ஆனால், இந்த மண்ணில் வாழும் நாம் ஒவ்வொருவரும் அவர்களது சகோதரர்கள். எனவே அவர்கள் யாருமற்றவர்கள் அல்லர். எனவே நொந்துவரும் எம் சகோதரர்சள் அகதிகள் அல்ல, மாறாக அவர்க்ள் இடம் பெயர்ந்தவர்கள்.

இடம் பெயர்ந்துவரும் எம் சகோதரங்கள் தங்குவதற்கு பாடசாலைகளும், சனசமூக நிலையங்களும் உண்டு என்றோ, அவர்களைப் பராமரிப்பது பொது ஸ்தாபனங்களின் கடமையென்றோ நாம் எண்ணக்கூடாது.

எம் சகோதரர்களுக்கு தங்க இடமளித்து பராமரிப்பது எம் ஒவ்வொருவரினதும் தலையான கடமையாகும்.

இன்றைய நெருக்கடி நிலைமைகள் இடம் பெயரும் மக்களுக்கு மட்டும் உரித்தானவையல்ல. அவை எமக்கும் பொதுவானவை.

சிலவேளைகளில் நாளை நாமும் இடம் பெயர வேண்டிய அவசியம் ஏற்படலாம். அல்லலுற்று வருவோரை அரவணைப்பது, ஆறுதல் அளிப்பது என்பன எமக்குரிய பணிகளாகும்.

அண்டி வருவோர்க்கு புகலிடம் தராது தட்டிக்கழிப்பது மட்டுமின்றி வேறுசில வேதனையான சம்பவங்களும் கடந்த காலங்களில் நிகழ்ந்ததையும் நாம் அறிவோம்.

பாதுகாப்புத்தேடி இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளில் திருடுவது என்பது அவற்றில் முக்கியமானது. எரிகின்ற வீட்டில் பிடுங்குவது போன்ற மனித நேயமற்ற செயல் இது

அந்த மக்கள் சேர்த்த சொத்துக்கள் இன்று அவர்களுக்கு இல்லாமற்போனது போல், நீங்களும் திருடிச் சேர்க்கும் சொத்தும் நிலைக்கப்போவதில்லை.

எனவே இலட்சங்களைத் தேடாதீர்கள், இதயங்களைத் தேடுங்கள்.

நாம் ஏற்கனவே இதயநாதத்தில் குறிப்பிட்டிருந்த விடயத்தையும் இத்தருணத்தில் வலியுறுத்த விரும்புகின்றோம்.

அதுதான் இரத்ததானம். வைத்தியசாலைகளில் காயங்களுடன் உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் எம் சகோதரர்கள் பலருக்கு அவசரமாக இரத்தம் தேவைப்படுகின்றது.

இரத்த வங்கியில் போதுமான அளவு இரத்தம் இல்லை. இந்நிலையில் ஆரோக்கியமான உடல்நிலை கொண்ட ஒவ்வொருவரும் இரத்தம் வழங்க முன்வர வேண்டும் என்பது எமது பணிவான வேண்டுகோள்.

இரத்தம் வழங்குவதால் எந்தக் கெடுதலும் இல்லை. மாறாக எமது குருதி சுத்தமாக அது வழிவகுக்கின்றது.

எனவே அண்டிவரும் அல்லலுற்ற மக்களை அரவணைப்பதும், இரத்தம் வழங்கி எம் சகோதரர்களை வாழவைப்பதும் தான் நாம் எமக்கென சேர்க்கும் புண்ணியங்களாகும் என்பதை நினைவில் நிறுத்தி இன்றே செயற்படுவோம்.

# இதயநாதம்

திங்கட்கிழமை 18—06—1990

நல்வாக்கு

கல்விக்கு ஆபத்து மறதியாகும். கல்வியைப் பழுதாக்குவது அதற்குத் தகுதியில்லாத மனிதனிடம் சென்று அதைப் பற்றிப் பேசுவதாகும்.

—நபிகள் நாயகம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் ஒரு நவீன தென்னாலிராமன்

நகைச்சுவை உணர்வு மிகவும் நிறைந்தவர்கள் தமிழர்கள் என்றும் அது மிகவும் குறைந்தவர்கள் ரஷ்யர்கள் என்றும் கூறுவதுண்டு. தென்னாலிராமனை அறியாதவர்கள் இல்லை.

சிங்களவர்களும் நகைச்சுவை உணர்வில் குறைந்தவர்கள் அல்ல என்பதற்கு அந்திரே நகைச்சுவை நல்ல சான்று.

ஏன் அவ்வளவு தூரம் போவான் நமது பாதுகாப்பு அமைச்சர்ரஞ்சன் சமீப காலங்களில் உதிர்த்துவரும்ஜோக்குகள் வர் ஒரு நவீன தென்னாலிராமன் என்பதை நிரூபிக்கின்றன.

பாராளுமன்றத்திலும் பத்திரிகையாளர்களிடமும் அவர் உதிர்த்து வரும் ஜோக்குகள் பிரபல்யமானவை.

முன்னாள் மாகாண முதல்வர் பெருமாள் மொரீசியஸ்சில் சீனி ஆராய்ச்சி செய்கிறார் என்பது தொடங்கி, பத்திரிகையாளர்களின் சிக்கலான கேள்விகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர்களைப் பாதுகாப்புச் சிறையில் அடைக்கப் போவதாகக் கூறியதுவரை அவர் பல ஜோக்குகளை அடித்திருக்கிறார்,

தலைமன்னார் கப்பல் சேவை தொடங்குவதற்கு முன்பே இந்தியக் குடியுரிமை பெற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்ப

> "மககளை ஏமாற்றி வாக்குட்பெற்று அரியாசனத்தில் வீற்றிருப்போர்க்கு, தமிழ் மக்களுக்காகத் தியாகிகளின் சமாதியில் கால்வைத்து, கழுத்தில் சயனைட்டைக் கட்டி, கைகளில் துப்பாக்கி ஏந்தி நிற்கும் வீரத்தியாகம் புரியாதது வியப்பல்லவே!"

வேண்டுமென்று அவர் அடித்த ஜோக்கில் நாடே அல்லோல கல்லோலப்பட்டது நினைவிருக்கலாம்.

ஜே, வி. பி. தலைவர்களை அழித்த கையோடு அவர் அடித்த "பவுண்டரி" றண்களைச் சேர்த்துக் கொடுத்ததும் உண்மைதான்.

இவை எல்லாவற்றையும் தூக்கியடித்து விட்டது இரண்டு நாட்களுக்கு முன் அவர் அடித்த ஒரு ஜோக்கு. பெருமாளுக்கு நேர்ந்த கதிதான் பிரபாகரனுக்கும் என்பதுதான் அந்த ஜோக்கு.

இதைக்கேட்டு நகைச்சுவையுடைய தமிழர்கள் விலா ஒடியச் சிரிக்கிறார்கள். காரணம் அதற்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை பாதுகாப்பு அமைச்சரைப் பரிபாபத்துக்கு உள்ளாக்கி இருப்பதுதான்.

அரண்மனைக்குக் கோமாளிகள் தேவைதான் ஆனால் அமைச்சர்களே கோமாளிகளாக மாறி விட்டால்......!

வரலாறு தெரிந்த தமிழர்கள் சிரிக்கவேனும் ஒரு காரணம் இருக்கிறது.

2000 ஆண்டுகளுக்கு முன் தம் நாவைக் காவாது தமிழைப் பழித்த கனகவிசயர் என்னும் மன்னர் முடித்தலை நெரியக் கல் சுமக்கப் பண்ணியவன் சேர மன்னன் செங்குட்டுவன்.

அமைச்சர்களுக்குச் சொல்வன்மை வேண்டும் சொற்சோர்வு கூடாது. இதனைத்தான் வள்ளுவர் அமைச்சர்களை நோக்கி "ஆக்கமும் கேடும் அதனால் வருதலால் காத்து ஓம்ப சொல்லின்கண் சோர்வு" என்கிறார்.

Since both wealth and evil result from speech, ministers should most Carefully guard themselves against any lapse there in.

அமைச்சர் நாட்டைப் பாதுகாக்க வேண்டுமானால் முதலில் தம் நாவைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்றார் வள்ளுவர்.

What ever you may leave unguard, guard your tongue otherwise errors of speech will result in misery.

'ஒருநாட்டு மக்களைத் தண்டிக்க விரும்பும் இறைவன் அந்த நாட்டு மக்களின் தலைவர்களின் தலையில் ஒன்றும் இல்லாமல் செய்து விடுகிறான்' என்பான் பிளேற்றோ. ஸ்ரீலங்காவின் தலைவர்களின் தலையில் என்ன இருக்கிறது என்பதைத் தான் நாக்கு காட்டுகிறதே!

—வித்துவான் க. ந. வேலன்

# வீதி விபத்துக்களைக் குறைக்க நீங்களும் உதவலாமே?

விபத்துக்கள் எல்லாமே எதிர்பாராமல் நடப்பவை என்று சொல்லிவிட முடியாது. பல விபத்துக்கு நம்முடைய கவனக் குறைவும், மனநிலையும், உடல் நிலையும் காரணம். வாகனங்களின் தேவைகள் பெருகப் பெருக விபத்துக்களும் நாளுக்குநாள் அதிகமாகியே வருகின்றன.

பெரிய பெரிய நகரங்களிலும், வானிலை அறிக்கைகளைப் போல, இன்று வரை சாலை விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை என்று காணப்படும் விளம்பரப் பலகைகளைப் பார்க்கும் போது மனம் சங்கடத்திற்கு உள்ளாகிறது. நாம் சாலை விபத்துக்களைக் குறைக்க எப்படி உதவ முடியும்?

## ஓட்டுபவரின் மனநிலை சரியாக இருக்க வேண்டும்

வாகனங்களை ஓட்டுபவரின் மனநிலை, விபத்துக்கள் ஏற்பட ஒரு முக்கிய காரணம். வாகனங்களை எடுத்து ஓட்டும் முன்பு வீட்டில மனைவியிடமோ, பெற்றோர்களிடமோ சண்டைபோட்டு விட்டு அதே மன நிலையுடன் வாகனத்தை எடுத்து ஓட்ட ஆரம்பித்தால்வாகனம் ரோட்டில் சென்று கொண்டிருந்தாலும் ஓட்டுபவரின் மனம் வீட்டில் நடந்த சண்டையைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு வருகிறது.

எதிரில் வாகனம் வருவது சாலையில் போகும் மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் குறிப்பிட்ட நபருக்குக் கவனம் முழுவதும் வீட்டில் நடந்த சண்டையில் இருப்பதால் எதிரில் வரும் வண்டியை கவனிப்பதில்லை. விபத்து நடக்கிறது.

பெற்றோர்கள் திட்டியிருந்தாலோ அல்லது மனைவி மக்கள் மனதைப் புண்படும் படி பேசி இருந்தாலோ, வாகனத்தை ஓட்டுபவருக்கு தான் யாருக்கும் தேவையில்லாதவன். தன்னிடம் உண்மையாக அன்புகாட்டுபவர்கள் யாரும் இல்லை. தனக்கு என்ன நேர்ந்தால்தான் என்னவாகப்போகிறது' என்ற விரக்தி ஏற்படுகிறது.

அதனால் வண்டி ஓட்டும் போதுஅலட்சிய மனோபாவம் ஏற்பட்டு விபத்துக்களை எதிர் கொண்டு அழைக்கும் மனநிலையில் இருக்கிறார்கள். பல விபத்துக்களுக்கும் முக்கிய காரணம் இத்தகைய மனநிலை இதனைக் குறைக்க நீங்கள் உதவ முடியுமே!

## அவசரம் வேண்டாம்

ஒரு இடத்திற்கு வாகனத்தில் போக வேண்டுமென்றால், போகும் இடத்தின் தூரத்தை அனுசரித்து, போகும் வழியின் போக்குவரத்து நெரிசலை அனுசரித்து நேரத்தைக் கணக்கிட வேண்டும். வீட்டில் புறப்பட தாமதமாக்கி விட்டு அந்த காலதாமதத்தை எல்லாம் வண்டியின் வேகத்தின் மூலம் சரிசெய்து கொள்ளலாம் என்று முயலும்போது பல விபத்துக்கள் ஏற்படுகின்றன.

நேரம் குறைவாக இருப்பதால் எப்படியும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வாகனங்களின் இடையில் எப்படியாவது 'நுழைந்து' போக வேண்டும் என்று தோன்றுகிறது. இப்படிச் செய்யும்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன. கொஞ்சம்முன்னதாகவே நீங்கள் வீட்டில் இருந்து கிளம்பலாமே!

## உடல்நிலையும் ஒரு காரணம்

உடல் மிகவும் அசதியாக இருக்கும் போது ஓட்டுபவரின் மனமும் உடலும் ஒருங்கிணைந்து வேலை செய்வதில்லை. மிகவும் சோர்வாக இருக்கும் போது வண்டியை ஓட்டாமல் இருப்பது நல்லது. குடித்து விட்டு வண்டியை ஓட்டுவது இன்றைய ஃபேஷன்!

'எனக்கு நல்ல கண்ட்ரோல் உண்டு' என்று சொல்லிக் கொண்டு வண்டியை ஓட்டுபவர்கள் தங்களை மாத்திரம் அல்லாமல் தங்களுடன் கூட வருபவர்களையும் விபத்துக்கு உள்ளாக்கிறார்கள். இத்தகைய விபத்துக்கள் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. குடிப் பழகக்கத்தை நீங்கள் தடை செய்ய முடியாவிட்டால். குடித்து விட்டு வண்டியை ஓட்டாமல் இருக்கும் படி உங்கள் கணவரையோ. மகனையோ மற்ற உறவினர்களையோ வற்புறுத்தலாமே!

## பேச்சுக் கொடுக்காதீர்கள்

ஒரு சிலர் வண்டியை ஓட்டிச் செல்லும் போதுபின்னால் உட்கார்ந்திருக்கும் பெண்மணி பேசிக்கொண்டே வர வண்டியை ஓட்டுபவர் அதனைக் கேட்டுக்கொண்டு அவ்வப்போது பதில் சொல்லிக் கொண்டு வருவார்.

இதைப் பார்க்கும் போது அவர்களைப் பார்த்து அட இவ்வளவு அன்னியோன்யமாக இருக்கிறார்களே! என்று சந்தோஷப்பட முடியாது. இவர்களுக்கு பேசிக் கொள்ள, வீட்டில் நேரமே இல்லையோ, வேறு இடமே இல்லையா? பேச்சு சுவாரஸ்யத்தில் எதிரே பக்கத்தில் வரும் வண்டிகளை ஒரு கணம் கவனிக்காமல் இருந்துவிட்டாலும் விபத்து ஏற்படுகிறது. வாகனங்களில் செல்லும்போது கூடியவரை முக்கியமான விஷயங்களைப் பேசாமல், விவாதிக்காமல் இருக்கவேண்டும்.

## காற்றில் பறக்கும் புடைவைகள்

இரண்டு சக்கரவண்டிகளில், குறிப்பாக மோட்டார் சைக்கிளில் போகும் பெண்களின் புடைவைகள் சக்கரத்தில் சிக்சிக் கொண்டு அதனால் ஏற்படும் விபத்துக்கள் இன்னும் நடந்து கொண்டு இருக்கின்றன. இது போன்ற பல சம்பவங்களைப் பத்திரிகைகளில் படித்தும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கக் கூடாதா?

## குடும்பக் கட்டுப்பாடு ஸ்கூட்டருக்குத் தேவை

நாமிருவர்; நமக்கிருவர். குடும்பத்தைப் பொறுத்தவரை சரிதான். குடும்பத்தில் உள்ள நபர்கள் ஒருவருக்கொருவர் அன்பினைக் காண்பித்துக் கொள்ள வேண்டியது அவசியமே. நன்றாக, வளர்ந்த

(6 - ம் பக்கம் பார்க்க)

# செய்தி மஞ்சரி

## குழந்தைகளுக்கு பால்மா

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள இரண்டரை வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்குவதற்காக சமூக சேவைத் திணைக்களம் ஒரு தொகுதி பால்மா பக்கெட்டுக்களையும் சீனியையும் அனுப்பி வைத்துள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை, ஆகிய மாவட்டங்களில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் முழுமையாக நிவாரண உதவியைப் பெற்றுள்ளார்கள்.

## இலங்கை தேநீர் ஏற்றுமதி

தகரத்தில் அடைக்கப்பட்ட தேநீர் மிகவிரைவில் உலக சந்தையில் வர்த்தகத்திற்கு விடத் தீர்மனிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிலிருந்தும், தாய்வானிலிருந்தும் வந்திருந்த வர்த்தகத் தூதுக்கோஷ்டிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது இது குறித்து ஆராயப்பட்டது. (7கி

## திருக்கேதீஸ்வரத்துக்கு மின்சாரம்

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு மின்சார வசதி கிடைத்துள்ளது.

இதுவரை காலமாக இவ் ஆலயத்திற்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிக்கும் ஜெனரேற்றர் மூலமே மின்சாரம் கிடைத்து வந்தது.

மின்சார வசதியின்றி உற்சவ காலங்களில் அடியார்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

## குளங்கள் புனரமைக்கப்படும்

அம்பாறை மாவட்ட கமத்தொழில் சேவை திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் கரையோரப் பகுதி கிராமியக் குளங்கள் புனரமைப்புச் செய்யப் படவுள்ளன.

இப் புனரமைப்புக்கென ஒரு இலட்சம் ரூபா முதற் கட்டமாக செலவிடப் படவிருக்கின்றது. இத் திருத்த வேலைகள் ஜனசக்தி திட்டத்தின் கீழ் அந்தந்த கிராமத்தவர்களைக் கொண்டே மேற்கொள்ளப் படவுள்ளன.

## உதவி நிதியம்வழங்கப்படும்

உணவு முத்திரை பெறத் தகுதி இருந்தும் அவை கிடைக்காத சுமார் 12 லட்சம் பேருக்கு உணவு முத்திரை வழங்கப் படும்.

இத்துடன் தீவிரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டு பொது சன உதவி நிதி பெறத்தகுதியானோர்க்கும் பொது சன உதவி நிதியம் வழங்கப்படும்.

இது பற்றி மறுவாழ்வு, மறு சீரமைப்பு சமூகநல அமைச்சு தீர்மானிக்கவுள்ளது.

அரசு நடத்தியமதிப்பீட்டில்இருந்து 12இலட்சம்பேர்உணவு முத்திரை பெறத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. (7 கி)

## இடமாற்றம் உடன் இல்லை

வவுனியா மாவட்ட க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை வகுப்பு மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இம்மாவட்ட ஆசிரியர், அதிபர்களின் இடமாற்றம் பின் போடப் பட்டுள்ளது என வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார். உயர்தரப் பரீட்சை முடிந்தபின் இங்குள்ள ஆசிரியர் அதிபர்களை யாழ்மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

31 12.90க்கு பின் இவ்விடமாற்றம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (75, 77கி)

## வீடமைப்பு விண்ணப்பம்

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளரால் 15 இலட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் நன்மை பெற விரும்புவோரை பதிவு செய்யும் விண்ணப்பம் கோரப்படுகிறது.

குறிப்பிட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் வீடொன்றை அமைக்க வேண்டிய நிலையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை இந்த மாதம் 30ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர். (7கி)

## களஞ்சியப் பொறுப்பாளர் இல்லை

வவுனியா தொலைத்தொடர்பு திணைக்களத்தில் கடந்த ஐந்து மாதங்களாகக் களஞ்சியப் பொறுப்பாளர் இல்லாத காரணத்தினால் வேலைகள் தாமதம் அடைந்துள்ளதாகவும் வேலைகளுக்குத் தேவையான உபகரணங்களை பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7கி)

## பிரதம செயலாளர் விஜயம்

வடக்குகிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. என், கணேசநாதன் யாழ்ப்பாணம் மாநகர சனபக்கு விஜயம் செய்தார்.

வட-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் என் கணேசநாதன் மேற்கொண்ட விஜயத்தின் போது, யாழ் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் புனருத்தாரண வேலைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டதுடன், வேலைகள் தொடர்பாக எதிர்நோக்கும் சிரமங்கள் பற்றியும், ஆராயப்பட்டது. இது தொடர்பாக புனருத்தாரண அமைச்சுக்கூடாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி மேலதிக வேலைகளைத் துரிதப்படுத்திச் செய்யுமாறு, மேலதிக உதவிகள் தேவைப்படும் இடத்தில் அதற்கான ஒத்துழைப்பினைத் தான் வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார். (4,75கி)

## வர்த்தக சங்கக் கூட்டம்

இன்று திங்கள், நாளை செவ்வாய் ஆகிய இரு நாட்களிலும் முறையே நெல்லியடி, பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள வர்த்தகர்களுக்கான வர்த்தகர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் அங்குரார்ப்பண வைபவம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும். (44.கி)

### யாழ். பிறப்பு இறப்பு

## பதிவாளர் அலுவலக நேரம் நீடிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணப் பதிவாளர் அலுவலகத்தில்இறப்பு, பிறப்பு விவாகப் பதிவுப் பிரதிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் நண்பகலுடன் நிறுத்தப்படுகிறது. தூர இடங்களிலிருந்து விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்காக யாழ்ப்பாணம் பதிவாளர் அலுவலகத்துக்குவருகைதரும்போது அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் கடமைகள் முடிவடைந்து விடுவதால் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்து திரும்பிச் செல்லும் நிலை ஏற்படுகின்றது. இதனால் விண்ணப்பம் ஏற்கும் நேரத்தை அதிகரிக்குமாறு பொதுமக்கள் அரசாங்க அதிபரைக் கோரவிருப்பதாகவும்தெரியவந்துள்ளது(33:72)

## மருதங்கேணி உ.அ.அ. பிரிவுக்கு கால்நடை வைத்தியர் நியமனம்

(முள்ளியான்)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கால்நடை வைத்தியர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. க. சிவராசா கூறினார்.

கால்நடை வைத்தியர் இல்லாத காரணத்தினால் இப்பகுதி மக்கள் தங்கள் கால்நடைகளுக்கு வரும் நோய்களை குணப்படுத்த முடியாமல் பெரும் கஷ்டத்திற்கு உள்ளானார்கள். அத்துடன் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரியிடமே செல்லவேண்டிய நிலைமை இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டு வருகின்றது.

இப்பகுதியிலேயேகால்நடை வைத்திய பிரிவு ஏற்படுத்துவதன்மூலம் இப்பகுதி விவசாயிகளின் கஷடங்கள் குறைவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது. (43-கி)

## முறைசாராப்பயிற்சி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைக் கொத்தணி அமைப்பில் உள்ள பாடசாலைகளில் கல்வியினைக் கற்று வெளியேறிய மாணவர்களுக்காக முறைசாராக் கல்வித்திட்டத்தின்கீழ்ஆண்பெண் இருபாலாருக்கும் வானொலி பேணல்நெறியும் ஆண்களுக்கு வெல்டிங் நெறியும் பயிற்றப் பட உள்ளது. (ப-10)

### வடகிழக்கு மாகாணத்தில் எட்டு

## மாவட்டங்களில வர்த்தக ஆலோசனை மையங்கள்

(மட்டக்களப்பு)

சிறுகைத்தொழில் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சும், வடக்குக் கிழக்கு மாகாணகைத்தொழிற் சக்திவள அமைச்சும் இணைந்து மாவட்ட வர்த்தக ஆலோசனை மையங்களை அமைக்க இருக்கின்றன.

இத்தகவலை வடக்குக் கிழக்கு மாகாணக் கைத்தொழிற் சக்திவள அமைச்சின் செயலாளர் க. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வர்த்தக முயற்சிகளைஆரம்பிப்போருக்கும், தொழில் முயற்சிகளை ஆரம்பிப்போருக்கும் இம்மையத்தினூடாக ஆலோசனையும், பயிற்சியும் வழங்கப்படும்.

வடக்குக்கிழக்கு மாகாணத்தில் முதலாவது "மாவட்ட வர்த்தக ஆலோசனை மையம் இம்மாத இறுதியில் திருகோணமலையில் திறந்துவைக்கப்படும்.

இதனையடுத்து மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் இம்மையம் திறந்து வைக்கப்படும் என்றார். (5-கி)

## முத்திரை இல்லாத கடிதங்கள் தபாலகத்திலிருந்து மீட்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள உபதபால் நிலையமொன்றிக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட யாழ் பெரும்பாக தபால் அத்தியட்சகர் முத்திரை ஒட்டப்படாத வெளி நாட்டுக் கடிதங்கள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ளார்.

கடந்த பல மாதங்களுக்கு முன் பொதுமக்களால் மேற்படி உபதபாலதிபரிடம் கையளிக்கப்பட்ட கடிதங்களே இவை என விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. கடிதங்களின் பெறுமதிக்கு பணத்தைப்பெற்று கடிதங்களை அனுப்பாது பணத்தை சம்பந்தப்பட்ட உபதபாலதிபர் சூறையாடினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி யாழ் மாவட்ட தபால் திணைக்களம் புலன் விசாரணைகளைமேற்கொண்டுள்ளது.

## விபத்தில் மரணம்

சில தினங்களுக்கு முன் இருபாலைடச்வீதியில்இடம்பெற்ற லொறி சைக்கிள் விபத்தின் போது கங்காரட்ணம் வசந்தி 19 என்ற இளம் யுவதி மரணமாகியுள்ளார். (76)

### யாழ். மாவட்டத்தின்

## கடற்கரையோரங்களில் வெளிச்ச வீடுகள்

யாழ். மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் வெளிச்ச வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இருந்து பல இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வெளிச்ச வீடுகள் அமைக்கப்படாததன் காரணத்தினால் கடந்தகாலங்களில் ஆழ்கடலுக்குப் செல்லும் மீனவர்கள் கரை திருப்ப முடியாமல் திசைமாறிச் செல்லும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டதுண்டு.

மீனவர்களின் இக்குறைபாடுகளை நீக்குவதற்காகவே வெளிச்ச வீடுகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வெளிச்ச வீடுகள் தகுந்த இடங்களில் அமைக்கப்படுவது மிகவும் முக்கியமானது என்று கடற்றொழில் பரிசோதகர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (43 கி

## எழுதுவினைஞா சங்க யாழ்.நிர்வாகிகள் தேரிவு

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 29 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தி. மார்க்கண்டு புதிய தலைவராகவும், ஐ. தவராஜன், சதா தனபாலசிங்கம் ஆகியோர் துணைத்தலைவர்களாகவும், செ. பரராசசிங்கம் பொதுச் செயலாளராகவும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

மா. கனகநாதன், வை. குமாரசாமி ஆகியோர் துணைச் செயலாளர்களாகவும், க. கனகசபாபதி நிதிச் செயலாளராகவும், ம. ஞானசீலன் யாழ். மாவட்டப் பிரதிநிதியாகவும் போட்டி மூலம் தெரியப்பட்டனர்.

மா. தில்லைநாதன் சி. க. இராஜரத்தினம் ஆகியோர் துணை நிதிச்செயலாளர்களாகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். (36 கி)

## மகாவித்தியாலயத்தில் மலகூடம் இல்லை

(நாவற்குழி)

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும், மாணவிகளும் கல்வி கற்கும் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் சீரான மலசலகூடம் இன்றி மாணவர்கள் அவதியுறுகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் மலசலகூடத்திற்காக வெளியே போக வேண்டிய நிலையும்ஏற்படுகிறது.(ப-கி5)

## கிளிநொச்சியில் உணவு எரிபொருள் தட்டுப்பாடு

கிளிநொச்சியில்இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து உணவு எரிபொருள்கள் தட்டுப்பாடு நிலவுகின்றன. இதனால் மக்கள் பெரும் அவதியடைகின்றனர்

சில தினங்களாக இடம்பெற்றுவரும் அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து கிளிநொச்சி வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டுள்ளதால் உணவு மற்றும் எரிபொருட்கள் என்பவற்றிக்கு இப்பகுதியில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது, (35-ஸ்ரீ)

ஐக்கிய ஜேர்மனி

# கூட்டு அங்கத்துவ யோசனைக்கு மே. ஜேர்மனி எதிர்ப்பு

எதிர்கால ஐக்கிய ஜேர்மனி நேட்டோ அமைப்பிலும்: வார்சோ அமைப்பிலும் கூட்டாக அங்கத்துவம் பெறுவது என்ற சோவியத் யூனியனின் தலைவர் மிகைல் கொர்பச்சேவ் இன் யோசனையை மேற்கு ஜேர்மனித் தலைவர் ஹெல்மட் கோல்ட் நிராகரித்துள்ளார்.

இந்த யோசனை யதார்த்த மற்றது. ஆசையால் அதனை நிராகரிப்பதாக திரு. கோல்ட் தெரிவித்தார்.

நேட்டோ தாபனம் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில் இது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் ஆனால் அது ஒருபொருத்தமான யோசனையாக தென்படவில்லைஎன்றும் குறிப்பிட்டது.

கிழக்கைரோப்பிய நாடுகளில் ஜனநாயக மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் வார்சோ அமைப்பு பிரிந்துவிடும் நிலைமை தோன்றிய இந்தவேளையில் ஐக்கிய ஜேர்மனி நடுநிலை நாடாக விளங்கலாம் அல்லது ஐரோப்பிய பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பின் மேற்பார்வையில் ஐரோப்பிய பாதுகாப்பு முறையின் கீழ் வரலாம் என சோவியத்யூனியன் யோசனை தெரிவித்துள்ளது. (9.கு)

# பாகிஸ்தான் இராணுவத்திற்கு கூடுதல் அதிகாரம் இல்லை

பாகிஸ்தானில் கலகத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிந்து மாகாணத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தின் நீதித்துறை அதிகாரங்கள் எதனையும் கையளிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

சட்டம் ஒழுங்கை பராமரிக்கத்தான் ராணுவம் அங்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இங்கு எனவேஅங்குஅவர்களிடம்முழு அளவுக்குமொத்தமான நீதித் துறை அதிகாரங்களை வழங்குவதுஎன்றகேள்விஎழவில்லை எனச் சிந்து மாகாண செய்தித் துறைஅமைச்சர் முகமத் நிசிக் முகமத் நேற்று கராய்ச்சியில் தெரிவித்தார்.

பயங்கரவாதிகள் வேறு சமூக விரோத சக்திகளை ராணுவம் கைது செய்வதற்கு அரசியல் சாசனம் அனுமதியளிக்கிறது. ஆனால் அது நீதித்துறை எதனையும் ராணுவத்திற்குவழங்கவில்லைஎன்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (9 கி)

தென் ஆபிரிக்காவில்

# இனஒதுக்கல் கைவிடப்படும்வரை பொருளாதாரத் தடை தொடரும்

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை அந்நாடுமுற்றாக கைவிடும்வரை அந்நாட்டுக்கு எதிரான சகல தடை நடவடிக்கைகளையும் கடைப்பிடிக்குமாறு ஐரோப்பிய சமூகத்திட்டம் ஐரோப்பிய பாராளுமன்றம் வற்புறுத்தி கேட்டுள்ளது.

இனஒதுக்கல் கொள்கையை கடைப்பிடிக்கும் நாடுகளுக்கு எதிரான தடை நடவடிக்கைகள் யாவற்றையும் தொடரும்படி; ஐரோப்பிய பாராளுமன்றம் இயற்றிய தீர்மானம் மூலம் ஐரோப்பிய சமூக நாடுகளை கேட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவின் ஜனநாயக ஆட்சி முறைக்கு ஆதரவு அளிப்பதற்கு வசதியாக மேலும் அதிகமான பண வசதிக்கு ஏற்பாடு செய்யுமாறும் அத்தீர்மானம் கேட்டுள்ளது. இதனிடையே ஆபிரிக்க தேசிய காங்கிரசின் பிரதித்தலைவர் திரு. நெல்சன் மண்டேலா ஐரோப்பிய பாராளுமன்றத்தில் புதன்கிழமை அன்று உரை நிகழ்த்தினார்.

தடை நடவடிக்கைகள் ஒரளவுக்கு விலக்கப்பட்டாலும் அவை தென் ஆபிரிக்காவுக்கு ஒரு பெரிய அடியாகவே அமைந்துவிடும் என டாக்டர் நெல்சன்மண்டேலா குறிப்பிட்டுள்ளார். (9)

# திரைப்படத்துறையில் இந்தியா முன்னணியில்

யுனெஸ்கோ அண்மையில் நடாத்தி முடித்த கணக்கெடுப்பில் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் விஞ்ஞானம், கலை, கலாசாரம் பற்றிய திரைப்படங்களை எடுப்பதில் இந்தியாதான் முதலிடத்தில் இருக்கிறது என்பது தெரியவந்துள்ளது. இந்தியா சராசரியாக ஆண்டுக்கு, திரைப்படங்கள் உட்பட விஞ்ஞானம், கலை சம்பந்தப்பட்ட 840 படங்களை எடுக்கிறது. இந்த வகையில் இரண்டாவது இடத்தில் அமெரிக்காவும் (396) மூன்றாவது இடத்தில் ஜப்பானும் (311) நான்காவது, ஐந்தாவது இடங்களில் முறையே தைவானும் (235), பிலிப்பைன்ஸும் (130) உள்ளன என்றும் யுனெஸ்கோ பட்டியல் சான்று தருகின்றது. (9 கி)

# பாக்கு நீரிணைப் பகுதியில் அடுத்தவாரம் முதல் இந்தியரோந்து

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான 32 கிலோ மீற்றர் நீள பாக்கு நீரிணைக்கடற் பகுதியில் இந்தியக்கடற் படையினர் அடுத்த வாரம் முதல் ரோந்து மேற்கொள்வர் என தமிழ் நாட்டு அரசு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் கொரில்லாக்களின் நடமாட்டத்தை தடுக்கு முகமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் தமிழ் கொரில்லாக்குழுக்கள் தமது தளங்களை அமைக்கும் முயற்சியை தடுப்பதற்கு மேற்படி கடற் பகுதியில் கடற்படை ரோந்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுள்ளதாகத் தமிழ்நாடு உள் துறை செயலர் திரு. ஆர். நாகராஜன் தெரிவித்தார். (9கி)

# தென்கொரிய-ரஷ்ய உறவுகள் விருத்தியடையும் அறிகுறி

தென். கொரியா கடந்த வாரம் சோவியத் யூனியனுடன் உச்சி மாநாடு ஒன்றை நடாத்தியதன் மூலம் அந்நாட்டுடனான உறவுகளை விருத்தி செய்வதில் முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆனால் சீனாவுடன் உத்தியோக பூர்வ உறவுகளை விருத்தி செய்ய முயற்சிகள் பலதடவைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என கூறப்படுகிறது.

சீனாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையில் உறவுகள் இருப்பது இரு நாடுகளுக்கும் அவசியமானது. நாம் சீனாவுடன் உத்தியோக பூர்வ உறவுகளை வைத்திருக்க விரும்புகிறோம். ஆனால் சீனாவோ உத்தியோக பூர்வ மற்ற உறவுகளை வைத்திருக்க விரும்புகிறது என தென் கொரிய உதவி வெளிவிகார அமைச்சர் பத்திரிகைபாளரிடம் தெரிவித்தார்.

தென் கொரிய ஜனாதிபதியும் ரஷ்சிய ஜனாதிபதியும் கடந்த வாரம் சான்பிரான்சிஸ்கோவில் பேச்சு நடத்தியது தென் கொரியாவுக்கு ராஜதந்திரரீதியில் பெரும் சாதனை என்று கூறப்படுகிறது.

இரு நாடுகளும் விரைவில் உத்தியோக பூர்வ ராஜதந்திர உரவுகளை ஏற்படுத்திக் கொள்ள விருக்கின்றன. சான் பிரான்கிஸ்கோ உச்சிமாநாட்டில் ஏற்பட்ட இணக்கத்திற்கு ஏற்ப பரஸ்பர உத்தியோக பூர்வ ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்காக தென் கொரிய அதிகாரி ஒருவர் சோவியத் யூனியன் சென்றுள்ளார் என உதவி வெளிவிவகார அமைச்சர் லி. குவான் சிங் தெரிவித்தார். (9 கி)

# கொள்கையை மாற்ற அமெரிக்கா தீர்மானம்

ஓசோன் மண்டலத்தை பாதுகாக்கும் விடயத்தில் தனது கொள்கையை மாற்றிக்கொண்டு; இதற்கான புதிய சர்வதேச நிதியத்தினை ஆதரிப்பது என அமெரிக்கா இறுதியாக தீர்மானித்துள்ளது.

இந்தியாவும் சீனாவும் இத்தகைய நிதியத்திற்கு முதலில் ஆலோசனை தெரிவித்திருந்தன, இந்த நிதியத்திற்கு அமெரிக்கா இரண்டரைக் கோடி அமெரிக்க டாலர் உதவியை வழங்கவேண்டும். (9 கி)

# இந்த நூற்றாண்டின் பெருமழை

பம்பாயில் நேற்று முன்தினம் பெய்த மழையினால் சாதாரண வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 7 பேர் இறந்துள்ளனர். இந்த நூற்றாண்டிலேயே ஒரே நாளில்பெய்துள்ள பெருமழை இதுவே என்றும் கூறப்படுகிறது. 600 மில்லி லீட்டர் மழை பெய்ததாக கூறப்படுகிறது. இம்மழையினால் போக்குவரத்து சேவைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (9 கி)

# ரஷ்ய வீராங்கனை சாம்பியன்

கிரீஸ் நாட்டின் தலை நகரான எதென்ஸில் நடந்த ஐரோப்பியப் பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன் ஷிப்போட்டியில் 17 வயது ரஷ்ய வீராங்கனையான ஸ்வெட்லானா போகின்ஸ்காயா என்பவர் 39.874 புள்ளிகள் எடுத்துப் பட்டத்தைக் கைப்பற்றினாள்.

இரண்டாவது இடத்தையும் ரஷ்ய வீராங்கனை ஒருவரே பெற்றார், மூன்றாவது இடம் ஹங்கேரியப் பெண்ணுக்குக் கிடைத்தது.

முதலிடம் பெற்ற 17 வயது போகின்ஸ்காயா மே மாதத்துடன் ஒய்வு பெறுகிறார். காரணம் 13, 14, 15 வயதுக்குள் இந்தச் சாதனையைச் செய்திருக்க வேண்டும். நான் டூ லேட்' என்கிறார் அவர். இனி ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டுக்கு உடல் சொல்லியபடி வளையாது என்பது இவரது அசைக்க முடியாதகருத்து. (9 கி)

# ஸீனத் பெயரில் வாசனைத் திரவியம்

பிரான்ஸ் நாட்டில் வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனம் தமது புதிய உற்பத்திப் பொருள் ஒன்றுக்கு, வட இந்திய நடிகை ஸீனத் அமனின் பெயரை வைத்துள்ளனர்.

'ஸீனத்' என்ற இப் பொருளை அறிமுகம் செய்யுமுகமாக இவர் இலங்கைக்கும் அண்மையில் வந்திருந்தார். தனது பெயரை வாசனைத் திரவியமொன்றிற்கு பிரான்ஸ் வாசனைத்திரவிய உற்பத்தியாளர்கள் வைக்க தீர்மானித்ததை யிட்டு தான் மகிழ்ச்சியும், பெருமையும் அடைவதாக 'குர்பானி' புகழ் ஸீனத் அமன் கூறியுள்ளார். (9 கி)

அத்வானி சொல்கிறார்

# முன்னணியின் ஸ்திரத்தன்மை ஜனதா தளத்திலேயே உள்ளது

இந்தியாவில் ஜனதா தள் கட்சி தனது அமைப்பை ஒழுங்காக முறைப்படுத்திக் கொண்டால்; மத்தியில் தேசிய முன்னணி அரசு தனது முழுப் பதவிக் காலத்துக்குய நீடித்திருக்க முடியும் என்று பாரதிய ஜனதர் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கல்கத்தாவில் பத்திரிகையாளர் கூட்டம் ஒன்றில் தேசிய அத்வானி, அரசின் உறுதிப்பாடு தொடர்பான பிரச்சனை பாரதிய ஜனதாக் கட்சியிடமிருந்தோ அல்லது இடதுசாரிக் கட்சிகளிடமிருந்தோ தோன்றவில்லை என்பதை சென்ற 6 மாதங்களின் அனுபவங்கள் எடுத்துக்காட்டியுள்ளன என கூறினார்.

அப்பிரச்சனைகள் ஜனதா தள் கட்சியில் இருந்தே தோன்றின என அத்வானி கூறினார். பஞ்சாப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் தெரிவித்ததாவது: கடத்திச் சென்று கொலை செய்யும் சம்பவங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து அம்மாநிலத்தில் நிலைமை மோசமாகியுள்ளது என்று தெரிவித்தார் (9-சி)

# சீனாவில் பெருமழை

சீனாவின் தென் மத்திய மாகாணமானகுனாவில் பெருவெள்ளத்தினால் 100 இற்கும் அதிகமானவர்கள் இறந்துள்ளார்கள். 1000 ற்கதிகமான ஹெக்டேயர் விளை நிலங்கள் சேதம் அடைந்துள்ளன. (9 கி)

## உலக அரங்கில்

# பாகிஸ்தான், இந்தியாவையும் காஷ்மீரிகள் நமபவில்லை

மக்கள் தேசிய கட்சி பிரமுகர் குர்பான் அலிக்கானின் கருத்துப்படி காஷ்மீரிகள் இந்திய மத்திய அரசையோ, அல்லது பாகிஸ்தானிய அரசையோ தமது நலனில் அக்கறையுள்ளவர்கள் என்று கருதவில்லை.

அமெரிக்காவில் சட்டம் படித்து விட்டு இப்போது மிர்பூரில் வசிக்கும் குர்பான் அலிக்கானின் ம. தே. கட்சி சுதந்திர காஷ்மீருக்காக போராடுகிறது. காஷ்மீரிலிருந்து இந்தியா, பாகிஸ்தானின் இரண்டு படைகளும் விலக வேண்டும் என்றும், இந்த இரண்டு நாடுகளுக்குமே அடிமையாக இருக்கவும் விரும்பவில்லை என்றும் இக்கட்சி மேலும் கூறுகிறது.

காஷ்மீர் ஒரு சிறுபிரதேசமே ஆனாலும் ஒவ்வொரு இனத்திற்கும் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற உரிமை வேண்டும். மிகச் சிறிய இனம்கூட சுதந்திரம் பெறும் உரிமையை ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் வழங்குகிறது. ஆனால் இப்பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்தும் பாக். இந்தியா ஆகிய இரு நாடுகளும்; காஷ்மீர் நாலுபக்கமும் நாடுகளால் வளைக்கப்பட்ட சிறுபிரதேசம் எனவே அது ஒரு சுதந்திர தனி நாடாக இயங்க முடியாது என்று கூறுகிறது.

காஷ்மீர் பிரச்சினை ஒரு மதப் பிரச்சினை அல்ல. இது காஷ்மீர் மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டம் எனவும், அதற்கு வகுப்பு வாத சாயம் பூசக் கூடாது என்றும், குர்பான் அலிகான் கூறுகிறார். காஷ்மீரில் லடாக் பிரதேசத்தில் பௌத்தர்களும், ஜம்முவில் இந்துக்களும் வசிக்சிறார்கள் எபது யாரும் அறிந்ததே. தமது திட்டம் பற்றி கூறும்போது கான் கூறியதாவது: பாகிஸ்தானில் உள்ள பகுதியே முதலில் சுதந்திரம் அடைய வேண்டும். அதன் பின்பே இந்தியாவுடனான பகுதியின் சுதந்திரம் பற்றி வேண்டும் என்றார்.

காஷ்மீரிகளைப் பொறுத்தவரை இருநாடுகளையும் (பாகிஸ்தான் - இந்தியா) தமது எதிரிகளாக கருதுகின்றனர். அவர்கள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் காஷ்மீரியர்களைச் சுரண்டுகிறார்கள். பாகிஸ்தானில் ஒரு இயக்கம் எழுந்தாலும் அது நசுக்கப்பட்டுவிடும். இப்போது அதையே இந்தியா செய்வதைப் பார்க்கிறோம் என்று இரு நாடுகளையும் கான் சாடுகிறார். அவர் மேலும் கூறியதாவது; இருநாடுகளுமே காஷ்மீரின் எந்தப் பகுதியையும் வளம் படுத்தி விடவில்லை. படைகள் நடமாட்டத்திற்காக தெரு வசதி மாத்திரம் போடப்பட்டிருக்கிறது. (9கி)

## யுத்த நிறுத்தத்திற்கு முந்திய செய்திகள்

# கடற்படை முகாம் மீது தாக்குதல் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

தலைமன்னாரில் உள்ள கடற்படை இராணுவ கூட்டு முகாமின்மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் மூன்று மணிநேரமாக இடம் பெற்ற இந்த மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார், மற்றொரு போராளி படுகாயமடைந்தார்,

கடற்படையினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு-

ரி-81 (I) ரகதுப்பாக்கி-5, ரி 36 (II) ரகதுப்பாக்கி-II, ரி-56 (I) ரகதுப்பாக்கி-6, ஆர்.பி.ஜி (II) - 2, ஷெல்கள்-56, 303 எல்,எம்,ஜி-2, 60 மி.மீற்றர் மோட்டார்-2, அதற்குரியஷெல்-22 மற்றும் 303 றைபிள்-28

இவை தவிர பெருமளவு றவைகள், குண்டுகள், என்பனவும்கைப்பற்றப்பட்டன.(கி)

# மன்னாரில் பயணிகளுடன் வாகனங்கள் தடுத்துவைப்பு

நானாட்டானில் இருந்து மன்னார் நகருக்கு வந்து கொண்டிருந்த பஸ் ஒன்று இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இப்பஸ் வண்டியில் ஆண்களும், பெண்களுமாக ஏராளமானோர் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்காலையில் இருந்து மன்னாருக்கு டீசல்களுடன் சென்ற வான் ஒன்றும் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. தடுத்துவைக்கப்பட்டவர்களின் நிலை தெரியவில்லை.(17 கி)

# சீருடை கொள்ளையரால் வாகனங்கள் வழிமறிப்பு

புத்துவெட்டுவான் இராணுவ முகாம் முன்னால் சீர் உடையுடன் வாகனங்களில் கொள்ளையும் தாக்குதலும் இடம் பெற்று வருகிறது.

கிளிநொச்சித்தாக்குதலைத் தொடர்ந்து கண்டி வீதி புத்துவெட்டுவான் ஊடாக செல்லும் வாகனங்களை இராணுவ உடையுடன் துப்பாக்கிகள் சகிதம் நின்று பெருந்தொகைப் பணம் நகைகள் என்பவற்றைக் கொள்ளை அடிப்பதுடன் பயணிகளை அடித்துத் துன்புறுத்தி பெண்களை கெட்டவார்த்தைகளால்ஏசியும் வருகின்றனர்.

(9கி)

## சுவையான செய்திகள்

### வணக்கம்!வணக்கம்!!வணக்கம்!!!

நமது நாட்டில் இரு கை கூப்பி வணக்கம் செலுத்துகிறோம். ஆனால் ஆபிரிக்காவில் எவ்வாறு வணக்கம் செலுத்துவார்கள் தெரியுமா?

ஒரு வகுப்பார் இடது தோள் துணியையும் மற்றொரு வகுப்பார் மார்புத்துணியையும் விலக்கி வணக்கம் செய்கின்றனர். இங்கு இந்த முறை நடைமுறையிலிருந்தால் பெண்களின் வணக்கத்தை ஏற்க பலர் முன்வருவாரோ?

### நங்கையை விட நாயே மேல்

லண்டன் கல்லூரி ஒன்றில் படிக்கும் 21 வயது மாணவன் மார்க். தான் செல்லமாக வளர்த்து வந்த பெண்நாயையே மார்க் மணம் செய்திருக்கிறார், மணமகளின் தங்கைகள் மணப்பெண்ணுக்கு தோழியாக இருந்தார்கள். திருமணச் சடங்குகளை மணமகனின் உறவினர் டேவிட் என்பவர் நடத்தினார்.

இதுபற்றி மணமகன் மார்க் என்ன சொல்கிறார்? மனிதன் எதன்மீது அன்பு செலுத்துகிறானோ அதையே அடைய விரும்புகிறான் அதுபோல நான் அன்புசெலுத்தும் ஹெக்ஸி (நாய்)யை காதலித்து மணந்து கொண்டேன். என் வாழ்க்கைத் துணையை கடைசிவரை கைவிடமாட்டேன்,

மணப்பெண் ஹெக்ஸீயிடம் திருமணத்திற்கு சம்மதம் கோட்டபோது தலையை அசைத்து தன் சம்மதத்தை தெரிவித்ததாம்.

### வாயை அடக்க இது ஒருவழி

ஓர் அறை நிறைய பெண்கள் அவர்களை ஒரு வார்த்தை கூடப்பேசாமல் மௌனமாய் இருக்கும்படி செய்யவேண்டும் முடியுமா? என்று ஒருவன் செய்து காட்டுகிறேன் என்று சவாலை ஏற்றுக் கொண்டான். மற்றவன், அறைக்குச் சென்று, பெண்களைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டான் யாரும் வாயைத் திறக்கவில்லை. பதில் பேசவில்லை சவாலில் வென்றான்.

அப்படி அவன் கேட்ட கேள்வி என்ன? உங்களில் யார் மூத்தவர்? என்பதுதான்.

# மன்னாரில் நடந்து சென்ற மூன்று மாணவர் கைது

மன்னார் புகையிரத நிலையத்தில் இருந்து தண்டவாளத்தால் நடந்து சென்ற மூன்று மாணவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காட்டில் ஒளித்திருந்த இராணுவமே இவர்களைக் கைது செய்தது இவர்களில் இருவர் சிறு நாவற்குளத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் கற்கிடந்த குளத்தைச் சேர்ந்தவர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது மேலதிக விபரம் தெரியவில்லை.

(17 கி)

### வீதி விபத்துக்கான…

குழந்தைகளையும் 'போன்சாய்' மரவளர்ப்பு முறைபோல் கைகால்களைச் சுருக்கி குறுக்கி மொத்த ஷேப்பினையே மாற்றி நான்கு பேர்களையும் ஸ்கூட்டரில் திணித்து, போகும் போது திடீர் என்று ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க முயலும் போது கண்ட்ரோல் இல்லாமல் போய்விடுகிறது.

இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்க முடியுமே. நான்கு பேர்கள் ஸ்கூட்டரில் போவதால் ஏற்படும் லாபத்தைவிட அப்படிப்போகும் போது ஏற்படும் விபத்தால் உண்டாகும் நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது என்பதை உணர்ந்து இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்கலாமே!

### காலணிகளில் கவனம் தேவை

வண்டிகளை ஓட்டுபவர்கள் காலணிகளில் பிரத்தியேகக் கவனம் செலுத்த வேண்டும். பழக்கப்பட்ட செருப்புகளில் இருந்து புதிய செருப்புகளை அணியும் போது காலுக்கும் செருப்புக்கும் சரியாகப் பொருந்தாமல் லூசாக இருந்தால் பிரேக்குகளை மிதிக்கும் போது சரியான உணர்வு கிடைப்பதில்லை.

புதிய செருப்புகளால் பல விபத்துக்கள் நடந்ததை வாகனம் ஓட்டுபலர்கள் ஒப்புக் கொள்வார்கள். புதிய செருப்புகள் அணியும் போது அதிக்கவனம் தேவை. வண்டியை ஓட்டிச் செல்லும் போதே வழியில் அதிக போக்குவரத்து இல்லாத இடங்களில் பிரேக்குகளை மிதித்துச் சரியான 'ஃபீலிங்' கிடைக்கிறதா என்பதைப்பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

### வண்டிக்கும் உடல் பரிசோதனை தேவை

உங்களது கணவரின், மகனின் உடல் நிலையைக் குறித்து அக்கறை காட்டுவதைப் போல அவ்வப்போது அவர்கள் ஓட்டும் வாகனங்களும் நல்ல கண்டிஷனில் இருக்கிறதா என்று கேளுங்கள்.

பிரேக்குகள், ஹார்ன்கள் சரியாக வேலை செய்யவில்லையென்றால் உடனே மெக்கானிக்குகளிடம் எடுத்துச் சென்று சரி செய்ய வற்புறுத்துங்கள். பரவாயில்லை, சமாளித்துக் கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்துடன் வண்டியை ஓட்ட அனுமதிக்காதீர்கள்.

### உயிர் எல்லாவற்றைக் காட்டிலும் பெரிது

உயிர் எல்லாவற்றைக் காட்டிலும் பெரிது என்ற உண்மையை அடிக்கடி உணரவையுங்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்குத் தாமதமாகப் போக நேரிட்டால் அதற்காக வருத்தப்பட வேண்டாம். அவசரப்பட்டு வழியில் ஏதாவது நேர்ந்திருந்தால்? என்று நினைத்துச் சமாதானப்படுங்கள். வெளியில் சென்று இருக்கும் உங்களது வருகைக்காக வீட்டில் உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற நினைப்பு எப்போதும் உங்களுக்கு இருக்கட்டும்.

# தமிழ் இளைஞர் கைது

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பொலிஸார் திடீர் முற்றுகை நடத்தி 1700 தமிழ் இளைஞர்கள் வரை கைது செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# பொதுமக்கள் பாதுகாப்புக்குழு அமைப்பு வேலைகள் துரிதம்

குடாநாடு முழுவதிலுமுள்ள கிராமங்கள் தோறும் அவசர பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான போர்க்கால அவசரக் கூட்டங்கள் கிராமங்கள் தோறும் தற்பொழுது நடாத்தப்பட்டுவருகின்றன.

ஏற்கனவே தொண்டமனாறு, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் இந்தப் பொதுமக்கள் பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

கடற்கரைப்பகுதி, மைதானங்கள் என்பவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு இந்த அவசரப் பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும்.

அவசர மருத்துவ உதவி வழங்குவது, உணவு வழங்குவது உள்ளிட்ட மேலும் பல கடமைகளையும் இக்குழுவினர் மேற்கொள்வர்.(கி)

# அனலைதீவு படகு மீது கடற்படை துப்பாக்கிப்பிரயோகம்

கடந்த சனிக்கிழமை காலை அனலைதீவுத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட பிரயாணிகள் மோட்டார் படகொன்றின் மீது காரைநகர் கடற்படை முகாமுக்கு அருகில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தப்பட்டது.

அச் சமயம் படகில் பெருந்தொகையான பயணிகள் இருந்தனர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சமயம் படகிலிருந்தோர் கடலில் குதித்து ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு பக்கமாகச் சென்று கரையேறி உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது, (கி)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### வடபகுதியில் விநியோகிக்கப்பட்ட திரிபோஷா தரமானதாம்

ஆசிரியர்,
முரசொலி

15/6/90 தினசரியில் சுகாதார திணைக்களத்திற்கு கெயர் ஸ்தாபனத்தால் இம்முறை பாவனைக்குதவாத திரிபோஷா வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நான் யாழ் சுகாதார வைத்திய அத்தியட்சகர், யாழ் வைத்திய அதிகாரி, யாழ் வைத்தியசாலை பொறுப்பதிகாரி என்போரை சந்தித்தேன்.

அவர்கள் இம்முறை வழங்கப்பட்ட திரிபோஷா தரமானது என்பதை உறுதிப் படுத்தியுள்ளனர். நான் இம்முறை வழங்கப்பட்ட திரிபோஷாவை நேரில் பரிசீலனை செய்து அது தரமானது என்பதை உறுதி செய்துள்ளேன்.

ம. பத்திநாதன்
பிரதிப் பணிப்பாளர்
அகில உலக கெயர்,
யாழ்ப்பாணம்.

### யாழ். பொது நூலகம் புத்துயிர்பெறுமா?

ஆசிரியர்,
''முரசொலி''

நமது தாயகப்பூமியின் தனிப்பெரும் கலங்கரை விளக்கமான ''யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம்'' 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாந்திகதி மனித மிருகங்களினால் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து; லயனல் பெனாண்டோ விசாரணைக் குழுவின் சிபாரிசுப்படி வழங்கப்படவிருந்த தொகை மொத்த ஒரு கோடி ரூபாய்கள். ஆனால், இன்று வரை அது சேர வேண்டிய இடத்திற்கு வந்து சேரவில்லை.

இதைத் தவிர மேற்படி நூலகப் புனரமைக்கென உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொது மக்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து பெற்ற பல இலட்சம் ரூபாய்களுக்கும் இன்றுவரை என்ன நேர்ந்தது? என்பது புரியாத மர்மமாகவே உள்ளது.

ஆக, உடனடியாக இந்தப்பணம் முழுவதும் உரிய இடத்திற்கு சேர்க்கப்பட்டு, பொதுமக்களின் அறிவுத்தாகத்தையும், நூற்பசியையுந் தீர்த்து வைக்க வேண்டும். பழையபடி நமது பொது நூலகம் புத்துயிர் பெற்று, புதிய வீறு கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட எல்லோரும் இந்தப் பணவிஷயத்திற் பரிபூரண ஒத்துழைப்பு நல்க முழுமனதுடன் முன்வருவார்களா?

யாழ்ப்பாணம். — சீலன், ஆனந்தன்.

யாழ். மாவட்டத்தில்

## மதுபானம் அளக்கும் கருவிகள் முத்திரையிடப்பட வேண்டும்

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மதுபான விற்பனைநிலையங்களிலும் உள்ள மதுபானம் அளக்கும் கருவிகள், அளவைகள், நிறுவனங்கள் யாவும் முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட அளவைகள் நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

அளவைகள், நிறுவைகள் பரிசோதகரினால் முத்திரையிடப்படாத அளக்கும் கருவிகளைப் பாவிப்பது சட்டவிரோதமானது என்றும், தண்டனைக்குரிய குற்றம் என்றும் எச்சரிக்கப் பட்டுள்ளது.

பாவனையாளர்கள் சட்டவிரோத அளவைக் கருவிகள் மதுபான விற்பனையின் போது பயன் படுத்தப் படுகின்றதா? என்பதை அவதானித்துத் தமது கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆளவைகள் நிறுவைகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

1976 ம் ஆண்டு தேசிய மெற்றிக் முறையாக்கும் சட்டத்தின் 20 ம் பிரிவின்கீழ் மதுபான விற்பனை நிலையங்களின் அளவைக் கருவிகள் அமைந்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (36கி)

## தள்ளாடிஷெல் தாக்குதலில் வர்த்தகர் பலி; பலர் காயம்

(மன்னார்)

மன்னார்க் கோட்டையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிலை கொண்டதை அடுத்து கடந்த வியாழக்கிழமை இரவு முதல் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து ஷெல்த்தாக்குதல் நடைபெற்றது.

ஷெல்கள் சில உப்புக்குளம் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. இதனால் சாபியாஸ்ஸ்ரோர்ஸ் முதலாளியான முஸ்லிம் ஒருவர்ஸ்தலத்தில்மரணமானார். வேறுசிலர் காயம் அடைந்தனர். சில வீடுகள் சேதம் அடைந்தன. மன்னார் அயன் ஸ்ரோர்ஸ்முதலாளி திருநாவுக்கரசு என்பவர் அதிர்ச்சியினால் எழுந்தூரில் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை காலை முதல் மன்னார் நகரப்பகுதியில் இருந்த மக்கள் தாராபுரம் எருக்கலம்பிட்டி போன்ற பகுதிகளுக்கு இடம்பெயரத் தொடாங்கினார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் படகுகள் மூலம்பள்ளிமுனைக் கடற்கரையில் இருந்து திருக்கேதீஸ்வரம், விடத்தல் தீவு சென்று யாழ்ப்பாணம் சென்றார்கள். பல வாகனங்கள் மாந்தைச்சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் சென்றன மாந்தைப் பலநோக்குக் கூட்டுறவுச் பங்க லொறி ஒன்றுஇலவசமாகப் பிரயாணிகளை யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிச் சென்றது. (17 கி)

## தலவாக்கொல்லையில் மண்சரிவு பதினொருபேர் மரணம்

தலவாக்கொல்லையில் இடம் பெற்ற மண்சரிவில் பதினொருபேர் மரணமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் ஐந்துகடைகள் முற்றாக சேதமுற்றன. இறந்தவர்களின் சடலங்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப் பட்டன.

சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு இணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி விஜயம் செய்து பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சந்தித்து உரையாடினார்.

## சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண்களுக்கே முன்னுரிமை

கட்டுநாயக்கா பியகம சுதந்திர வர்த்தக வலயங்களில் சுமார்மூவாயிரம் வரையிலான வேலை வாய்ப்புக்கள் இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் அதிக வேலைவாய்ப்புக்கள் பெண்களுக்கே உரியன எனவும் குறைந்த பட்சம் எட்டாம் வகுப்புப் படித்த பதினெட்டுக்கும் இருபத்தெட்டுக்கும் இடையிலான வயதுடையோர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிய வருகின்றது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு இணங்க இனவிகிதாசார அடிப்படையிலான ஆள்திரட்டல் கொள்கை கடைப்பிடிக்கப்படும். விண்ணப்பிக்கும் தகுதியான ஒருவர் மூன்று தொழில் முயற்சிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பைப் பெறுவர்.

பயிலுநராக சேரும் எவரும் மாதம் 975 ரூபாசம்பளமாக 6 மாதங்கள் பெறுவர். பயிற்சியின் பின்னர் ரூபா 1,200 ஆரம்ப மாதச் சம்பளமாக பெறுவார்.

சம்பளத்துடன் வரவு போனஸ், உற்பத்தி ஊக்கக் கொடுப்பனவு, வைத்திய உதவி, மானிய அடிப்படையிலான உணவு என்பனவையும வழங்கப்படும்.

புதிய கொள்கையின் படி சகல வேலை வாய்ப்புக்களுக்கும் தேவைப்படும் விண்ணப்பங்களை பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவுக்கு எழுதியே பெற வேண்டும் அவ்வாறு பெறப்படும் படிவங்களிலான விண்ணப்பங்கள் எவரது தலையீடும் இன்றி பரிசீலிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு தகுதியானவர்கள் அழைக்கப் படுவார்.

இங்கு தொழில் பயிற்சி பெறும் இளைஞர், யுவதிகளுக்கு இலகுவில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களும் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 80 கோடி ரூபாவில் தென் பகுதியில் கொக்கவளல் மூன்றாவது வலயம் ஒன்றும் ஆரம்பிக்க முடிவாகியுள்ளது. (7கி)

## இரத்தினக்கல் மோசடி கோடீஸ்வரன் தேடப்படுகிறார்

கெவுட் இரத்தினக்கற்களை கடத்துவோரை தேடிக் கண்டுபிடிக்கும்படி ஜனாதிபதி ஆர் பிரேமதாச சுங்கப் பகுதியினரைப் பணித்துள்ளார்.

இப்பணிப்புரையை அடுத்து கடத்தல் வேலையில் ஈடுபட்டிருந்த கோடீஸ்வரரின் தெகிவளையிலுள்ள 'கெவுட்'குகை பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது. இச்சர்ந்தர்ப்பத்தில் கோடீஸ்வரர் ஹொங்கொங் நகரில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாராம்.

குகை முற்றுகையிடப்பட்டதைத் அடுத்து தபால்த்திணைக்களப் பார்சல் பிரிவைச் சேர்ந்த நான்கு ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட 'கெவுட்' வீட்டின் பெறுமதி சுமார் 33 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது;

வீட்டிலுள்ள ஒரு அறையில் கெவுட் கற்களைக் கொண்ட பல பொதிகள் குவிக்கப்பட்டிருந்தன இவற்றைக் கொழும்புக்கு எடுத்துவர லொறியை பயன்படுத்த வேண்மருந்தது.

சந்தேக நபரைக் கைது செய்ய சுங்க அதிகாரிகள் ரகசியப் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர். (76.கி)

## மொத்த விற்பனைவரி குறைப்பு

குளிரூட்டிப் பெட்டி வியாபார மொத்த விற்பனை வரி: 40 சத வீதத்தில் இருந்து 20 சத வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது-

கடந்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் போது சகல விதமான ஆடம்பரப் பொருட்களுக்கும் மொத்த விற்பனை வரி 40 சத வீதமாக அதிகரிக்கப்பட்டதுதெரிந்தே. (7கி)

## முரசொலி செய்தியால் பலன்

(கோப்பாய்)

கோப்பாய் இராச வீதியில் வாமாஸ் ஒழுங்கையில் மின்சார கேபின்களில் தொங்கிக் கொண்டிருந்த தேக்கு மரமின் கம்பம் யாழ். மின்சார சபையினால் மாற்றப்பட்டு புதிய மின் கம்பம் நாட்டப் பட்டுள்ளது.

இக்கம்பத்தின்நிலை பற்றி முரசொலிசெய்தி வெளியிட்ட அதே தினமே நண்பகல் நேரத்தில் புதிய மின்கம்பம் மாற்றப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க தாகும் (23.கி)

## வவுனியாவில் சிற்றூரவை

வவுனியா மாவட்டத்தில் 88 சிற்றூர் அவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவில் 20 நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 28, வவுனியா தமிழ் பிரிவில் 40 சிற்றூரவைகள் அமைக்கப்பட்டுள்ளன. (11.கி)

எரிபொருள் தட்டுப்பாட்டால்

## சுத்திகரிப்பு தடைப்படாதிருக்க ஆணையாளர் நடவடிக்கை

தற்போது நிலவும் எரிபொருள் பற்றாக்குறையால் நகர சுத்திகரிப்புத் தொழில்கள் பாதிக்கப்பட்டபோதும் பஸ்நிலைய சுற்றாடல் யாழ் வைத்தியசாலை போன்ற அத்தியாவசிய இடங்களில் சுத்திகரிப்பு வேலைகள் தடையின்றி மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

யாழ் பெற்றோலிய கூட்டுத்தாபன பிரதேச முகாமையாளருடன் தொடர்பு கொண்டு திருப்தியான வேலைகளை தாம் வழங்க முயற்சிப்பதாக யாழ் மாநகரசபை விசேட ஆணையாளர் வி, பாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான வாகனங்களில் 50 வீதமான வாகனங்கள் மட்டுமே தற்பொழுது சுத்திகரிப்புச் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

யாழ் மாவட்டத்தில்

## சேதமடைந்தவீடுகளைத் திருத்த 40 லட்சம்ரூபா வழங்கப்பட்டது

புனர் நிர்மாண புனர் அமைப்புத் திட்டத்தின்கீழ் சேதமடைந்துள்ள வீடுகளைத் திருத்தியமைப்பதற்காக 40 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டு விட்டது.

இத்திட்டத்தின்கீழ் 700க்கும், 1500 ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானத்தைப் பெறுவோருக்கென கடந்தமாதம் 31ம் திகதி வரையில் 554 குடும்பங்களுக்கு நிவாரணமாக 23 இலட்சமும், கடனாகப் 17 இலட்சமுமாக மொத்தம் 40 இலட்சம் ரூபா யாழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 44வீடுகள் கடந்த31ம்திகதிவரையிற் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் மற்றைய வீடுகள் வெவ்வேறு கட்டங்களில் வேலைகள் நடைபெறுவதாகவும்தெரிவிக்கப்பட்டது.(4, 75 கி)

## வெளியூர் தபால் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம்

பிறமாவட்டங்களுக்கும், யாழ் குடாநாட்டுக்கு மிடையேயான தபால் சேவைகள் கடந்த புதன்கிழமை முதல் முற்றாகப் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

தற்பொழுது குடாநாட்டுக்கு உள்ளேயான தபால் சேவைகள் மட்டும் பஸ்வண்டிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

குடாநாட்டிலிருந்து கொழும்புஉட்பட வெளியிடங்களுக்கென பொதியிடப்பட்ட தபால் பொதிகள் அனைத்தும் யாழ் பிரதம தபாலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான பார்சல் சேவைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தகாரர் முன்வரவில்லை

## ஆரம்ப சுகாதார நிலைய அமைப்புவேலைஸ்தம்பிதம்

வடமராட்சி கிழக்கில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கட்டிடங்கள் அமைப்பதற்கு யாழ் சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்கனவே கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு முடிவுத் திகதியும் அறிவிக்கப்பட்டு முடிவடைந்துவிட்டது.

ஆனால் எந்த ஒரு ஒப்பந்தக்காரரும் வடமராட்சி கிழக்கில் ஆரம்பசுகாதார நிலையங்களின் கட்டிடத்தை அமைப்பதற்கு முன் வரவில்லை என யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலமை காரணமாகவே இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கின் பின்தங்கிய பகுதிகளான ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் இந்நிலயங்களை அமைப்பதற்கு சுகாதாரத் திணைக்களமும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயமும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன.

இவ் ஆரம்பசுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு மீண்டும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படும் எனயாழ்ப்பாண சுகாதாரத்திணைக்கள உள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (43 கி)

வவுனியாப் பிராந்தியத்தில்

## ஊழியர் பற்றாக்குறை தொலைத்தொடர்பு பாதிப்பு

வவுனியா மாட்டத்தில் தொலைத் தொடர்பு இலாகாவில் பணிபுரிவதற்கு போதிய ஊழியர்கள் இல்லாததினால் இச்சேவையினை அபிவிருத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என சம்பந்தப்பட்ட இலாகா உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் வவுனியா தொலைத்தொடர்பு பொறியியலாளர் பிரிவின் கீழ் இயங்குகின்றது.

மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்பு இவ்விலாகாவினைப் பொறுத்தமட்டில் ஒரு தொழிலாளியைக் கூட தற்காலிகமாக நியமிக்கும் அதிகாரம் உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்கு வழங்கப்படவில்லை. (11கி)

## இலங்கை வங்கி புதியகிளை

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இலங்கைவங்கி ஒன்றின்கிளை திறக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளில் வடமராட்சிகிழக்கு உதவி அரச அதிபர் ஈடுபட்டுவருகின்றார். (43,கி)

## இறால் வளர்ப்பை ஊக்குவிக்க துரித நடவடிக்கை

வடமராட்சி கிழக்கில்

யாழ் மாவட்டத்தில் 'இறால்' வளர்ப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட உள்ளன.

விசேடமாக வடமராட்சி கிழக்கில் இறால் வளர்ப்புக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

வடமராட்சி கிழக்கில் 'நாகர் கோவில்' 'சுண்டிக்குளம்' ஆகிய பிரதேசங்களில் இறால் வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இப்பகுதிகளில் நீர்த்தன்மை இறால் வளர்ப்புக்கு உகந்ததாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிக விரைவில் இறால் வளர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதென கடற்றொழில் பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர். (43கி)

ரயில்வே திணைக்களம் துரித நடவடிக்கை

# வடபகுதிக்கான ரயில் சேவையாவும் வாரஇறுதியில்ஆரம்பமாகவுள்ளன

வடபகுதிக்கான ரயில் சேவையை இவ்வார இறுதிக்குள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

தண்டவாளங்களும் சிலிப்பர்க் கட்டைகளும் ரயில் பாதையில் இருந்து அகற்றப்பட்டுள்ள காரணத்தினாலே உடனடியாக ரயில் சேவைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதியில் உள்ள சகல ரயில்வே திணைக்களங்களுக்கும் தமது எல்லைக்குட்பட்ட புகையிரத வீதியில் அகற்றப்பட்ட தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர்க் கட்டைகளது தொகை மதிப்பீட்டை உடன் அனுப்பிவைக்குமாறு ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இம் மதிப்பீடு கிடைத்ததும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. முதல் கட்டமாக இவ்வார இறுதிக்குள் யாழ் நகர் வரை மட்டுமென ரயில் சேவையை நடாத்த திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தறபோது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு உணவுப்பொருள் தட்டுப்பாடு போன்றவற்றிற்கு ரயில்சேவை பாதிப்படைந்ததே காரணமாகும்.

இதேவேளை பளைக்கும் சாவகச்சேரிக்கும் இடையே கூடுதலான சிலிப்பர்க் கட்டைகளும் தண்டவாளங்களும் அகற்றப்பட்டுள்ளன எனதெரியவந்துள்ளன. (3)

## மின்சாரம் எரிபொருள் இன்றி தீவுப்பகுதி மக்கள் அவலம்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் காரைநகர்க்கடல் வழியாக வரும்மின்சாரக்கேபிள்கம்பிகள் சேதமாக்கப்பட்டதால் தீவுப்பகுதிக்கான மின்சார விநியோகம் முற்று முழுதாகத் தடைப்பட்டுள்ளது.

அத்துடன் போக்கு வரத்து வசதிகளும் தடைப்பட்டிருந்தன. இதனால் உணவுப் பொருட்கள், எரிபொருட்களின் விலைகளும் கூடி அவற்றிற்குத்தட்டுப்பாடும் ஏற்பட்டது.

விளக்கு ஏற்றுவதற்கு மண்ணெண்ணைகிடையாமல் மக்கள் பலர்வெறும் கலன்களுடனும் போத்தல்களுடனும் கடைகடையாகத் திரிந்த அவலக்காட்சிகளையும் காண முடிந்தது.

பண்ணை தாம்போதி பாதையின் தடையால் யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப் பகுதிக்குச் சென்ற மக்கள் அராலிப்பாதையினைப் பயன்படுத்தினர்

கடலிற் சிறு மீன்பிடிப் படகிற் பிரயாணத்தை மேற்கொண்டு அக்கரை செல்வதற்கு ஒரு ஆளிடமிருந்து ரூபா பத்து அறவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (19)

இராணுவத்தினராலும் காடையர்களினாலும்

## திருமலையில் படுகாயமடைந்து வடபகுதி வந்துள்ளனர்

கடந்த சில நாட்களாக திருமலை வெல்லாங்குழம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் சிங்களக் காடையர்களாலும் தாக்குதலுக்குள்ளான பல அப்பாவித் தமிழ் மக்கள் வடமராட்சி மந்திகை பவத்நிபசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள.

இவர்களில் சிலர் படுமோசமான காயங்கள் அடைந்துள்ளதால் யாழ் வைத்திளசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மந்திகை வைத்திய சாலையிலும் யாழ் வைத்திய சாலையிலும் சேர்க்கப்பட்டனர். (39)

## மாங்குளத்தில் சேதம்

நேற்றுநண்பகல் மாங்குளம் இராணுவமுகாம் அருகில் நடைபெற்ற மோதலில் விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகப்டர் ஒன்று தாக்குதலுகுள்ளானதில் சேதமடைந்துவிட்டதாக நள்ளிரவு கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கிறது.

**படையினர்**...

இதனால் கிளிநொச்சி, ஆனையிறவு முகாம்கள் ஊடாக போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்றது. இப்பகுதிகளில் உள்ள இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையில்க்கூட ஈடுபடவில்லை என தெரிவிக்கப்பட்டது, (03)

## காலமானார்

### க. தியாகராசா

புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச்சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் க. தியாகராசா 16-06-90 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற மாகோ கணபதிப்பிள்ளை விசாலாட்சியின் மகனும் தங்கம்மாவின் கணவரும், (அதிபர் திருநாவுக்கரசு வித்தியாசாலை) கலையரசி, பத்மகாந்தன் சுவிற்சலாந்து, கலைச்செல்வி, கலைவதனி, பிரேமகாந்தன், ஆகியோரின் தந்தையாரும் தர்மலிங்கத்தின் (வர்த்தகர் சுன்னாகம்) சகோதரரும், செல்வராசா (ஆசிரியர் இராமநாதபுரம் மகாவித்தியாலயம்) அவர்களின் மாமனாரும், தர்சிகாவின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-06-90 திங்கட்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கேரதீவு மயானத்தில் தகனம் சேய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
திருமதி தியாகராசா தங்கம்மா
மனைவி

7-ம் வட்டாரம்
புங்குடுதீவு

06299

**இவ்வாரத்தினுள்**..

கடந்த சிலநாட்களாக இடம் பெற்ற தாக்குதல்களில் காயமடைந்தவர்களுகக்கு தேவையான சகல மருந்துவகைகள் தற்போது கையிருப்பில் உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

**தொலை—**

பதில் பல இடர்கள் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திட்டமிடப்பட்ட ரீதியிலே இவ்வாறு தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

**வவுனியா**...

எனத் தெரிவிக்கப்பட்டது: தூர இட பஸ் சேவைகளை இவ் டிப்போ நடாத்தவில்லை

கிளிநொச்சி டிப்போ தனது யாழ்ப்பாண சேவையை நேற்று ஆரம்பித்திருந்தது. எனினும் கூடுதலான பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

வவுனியா டிப்போவும் தனது யாழ்ப்பாண சேவையை ஆரம்பித்திருந்தது பயணிகள் தொகை மிகவும் குறைவாகவே காணப்பட்டது (03)

**திருகோணமலை—**

உள்ள பாடசாலைகள், ஹோட்டல்கள், ஆலையங்கள் போன்றவற்றில் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை திருகோணமலையிலிருந்து புறப்பட்டவர்கள் நேற்றையதினமே முல்லைத்தீவு, கிளிநொச்சி வவுனியா போன்ற இடங்களுக்கு வந்துசேர்ந்துள்ளார்கள். (03)

**உணவு**...

பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்துக்குஇன்று காலை 8மணிக்கு வருகை தருமாறு அதிகாரிகள் கேட்டுள்ளனர். (03)

**யுத்த நிறுத்தம்**...

ஹெலி தாக்குதலினாலும் வெளியேறிய இம்மக்கள் மனதில் ஏற்பட்ட பீதி இன்னமும் தணியவில்லை.

ஒருசில பகுதி மக்கள் மீண்டும் அகதிகளாக வெளியேற வேண்டிய சந்தர்ப்பம் வருமா என்ற அச்சத்தினால் சொந்த இடங்களுக்கு திரும்பாமல் நிலைமையை அவதானித்து வருகின்றார்கள். (03)

## கூட்டு முயற்சியில் பதுங்கு குழிகள் அமைப்பு

யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலும் பதுங்கு குழிகளை அமைக்கும் வேலைகள் அவசர அவசரமாக மேற் கொள்ளப்பட்டுவருகின்றது. பல பகுதிகளிலும் நேற்று பதுங்கு குழிகளை கூட்டாக அமைக்கும் முயற்சிகளில் பொதுமக்கள் ஈடுபட்டிருந்தனர். ஷெல் தாக்குதல்களும், ஆகாயத்தாக்குதல்களும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால்பதுங்கு குழிகளைஅமைக்குமாறு ஏற்கனவே வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

மேஜர் முரளி வெற்றிக்கேடய

## 3வது சுற்று புதிர்ப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

இன்று திங்கட்கிழமை நடைபெற இருந்த 3ம் சுற்றுக்கான வெற்றியடைந்த பாடசாலைகளின்பொது அறிவுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

இது இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருந்தது தெரிந்ததே. மாணவர்களிடையே கூட்டுறவையும்புரிந்துணர்வையும்அறிவையும் வளர்க்கும்இத்தகைய போட்டிகள் எதிர்காலத்தில் எத்தகைய சூழ்நிலைகளிலும் நடாத்தப்படும். இதற்கான மாணவர்களின் பூரண ஒத்துழைப்பை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது. (3)

**ஸ்ரீலங்கா**...

வதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட மூவர் பலியாகியுள்ளனர். இதேசமயம் மட்டக்களப்பு மாவட்டத்திற்குமேலும் குண்டு வீச்சு விமானங்களையும் ஹெலிக்கப்டர்களையும் அனுப்பிவைக்கும் படி மட்டக்களப்பில் உள்ள இராணுவ அதிகாரிகள் கொழும்பில் உள்ள இராணுவ தலைமையகத்தை கோரியுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

**அம்பாறையில்**

மல்வத்தை கணபதிபுரத்தில் சிற்றூரவைத் தலைவர் கனகரத்தினம் என்பவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அதே பகுதியில்சித்திரவேலு என்பவரின் கைகளை துண்டித்ததுடன் மூன்று தமிழ் பெண்களை கைதுசெய்து தமது முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. பட்டிருப்பு பாலத்தடிக்கு நகர்ந்த இராணுவம் அங்கு தங்கியுள்ளது.

**திருமலையில்**

திருமலையில் அலஸ் தோட்டம் பகுதியில் இரு பொது மக்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதேவேளை 6ம் கட்டைப்பகுதியில் குண்டு வீச்சு விமானம் ஒன்று நடாத்திய தாக்குதலில் இரு வீடுகள் முற்றாக சேதமடைந்தன,

**வவுனியா**

வவுனியா இராணுவ முகாமில் இருந்து தொடர்ந்து நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் முகாமை அண்டிய பகுதிகளில் வாழும் பொது மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறியுள்ளனர். இதேசமயம் வவுனியா காமினி வித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் வெளியேறி முகாமில் இருந்து இருநூறு யார் தூரத்தில் காவல் அரண் அமைத்துள்ளனர். முல்லைத்தீவு மாங்குளம் பகுதிகளில் விமானம் தாக்குதல் நடத்தியுள்ளது எனத்தெரியவருகிறது.

## யாழ் நகரில் ஹெலி நோட்டம்

நேற்றிரவு 9 மணியளவில் யாழ் நகரைச் சுற்றி ஹெலி நோட்டமிட்டது. மிகவும் உயரமாகவே இந்த ஹெலி சென்றுகொண்டிருந்தது. கோட்டையை அண்டியுள்ள பகுதிகளை சுற்றியதால் இப்பகுதி மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருந்தது. (03)

**ஆகாய—**

போடப்பட்டன.

இவ்வாயுதப் பொதிகளை பின்னர் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**பலாலியில்**

நேற்றுக் காலை எட்டுமணியளவில் கட்டுவன் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தமது கனரக வாகனத்தை (புல்டோசர்) விடுதலைப் புலிகள் எடுக்கச் சென்றபோது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர்.புலிகள் தாக்குதல் நடத்தாது பின் வாங்கியபோது அக்கனரக வாகனத்தைச் சுற்றி இராணுவத்தினர் கண்ணிவெடிகளை புதைத்துவிட்டுச் சென்றனர்.

நேற்று மாலை காங்கேசன்துறை கடலில் பீரங்கிப் படகுகள் குடியிருப்புக்களை நோக்கி ஆட்லறி தாக்குதலை நடத்தின. (து)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஆம் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 18.06.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது